ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# ஸ்ரீராமர்பதிகம்.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

ஸ்ரீ

ஸ்ரீ ராமஜெயம்.



வரவரமுநயேநம:

# ஸ்ரீ ராமர் பதிகம்.

---

## பன்னிருசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

சீர்மேவு மாழ்வார்கள் பன்னிருவ ருன்புகழ் செப்பவும் ராமஜெயமே, திருவடிக் கன்பராய்ச் செல்வமுமுத்தியுஞ் சித்திதரும் ராமஜெயமே, கார்மேக வண்ணனே யென்றதிரௌபதையுமுன்காத்திட்டராமஜெயமே,

கரியாதி மூலமென்று ஓடமிட முதலையைக் கண்டித்த ராமஜெயமே, பார்மீதில் உன்பாத தூள்பட்டெழுந்தகலி பரிவான ராமஜெயமே, பாங்கான வேடன் மராமராவெனப்பகவி பரிந்திட்ட ராமஜெயமே, ஆர்த்தா னுரைக்கவறி வாருந்த ஞமத்தை யனுதினமும் ராமஜெயமே, ஐயனே யெனையாளு மெய்யனே ஸ்ரீமதே ராமாநுஜாயநமவே. (௧)

விஞ்சுகா ரணியவன ரிஷிகளுக் காதரவு மேவிடும் ராமஜெயமே, மேலான தசரதன் மைந்தனைப் புவிதனில் விளைந்திடும் ராமஜெயமே, செஞ்சொன்மொழி ஜனகராசன் வில்லொடித்துச் செயம்பெற்ற ராமஜெயமே, சீதைக் கிரண்டுவரங் கொடுத்துமே யயோத்தியில் சீர்பெற்ற ராமஜெபமே, தஞ்சமென்றனுமன் தனக்குச் சிரஞ்சீவி தந்திட்ட ராமஜெயமே, தந்தைக் குரைத்தசொல் வழுவா துதரணியில் தரித்தருளும் ராமஜெபமே, அஞ்சலென்றடியேனை யாதரித்துன்பாத மருள்செய்யும் ராமஜெபமே, ஐயனே யெனையாளுமெய்யனே ஸ்ரீமதேராமாநுஜாயநமவே. (௨)

விண்ணொளியதாகவே நந்தகோபன்மனையில் விளையாடும் ராமஜெயமே, வில்விஜயனுக்கு பகவற்கீதையோ

டியே வெற்றிதரும் ராமஜெயமே, கண்ணொளியதாகவே யன்புடன்கோவுகளை காத்ததும் ராமஜெயமே, கஞ்சனை வதைத்துடல் கிழித்தெரிந் தனைவர்க்கும் காட்சிதரும் ராமஜெயமே, கன்றெனசூரனைப்பாய்ந்து குடலைக்கிழித் துமறை கொண்டுவரும் ராமஜெயமே, கொன்றவன் றச ரதன்பெற்றசீர்மைந்தனே கோவிந்தராமஜெயமே, அண் ணலேயுனதுதிருவடியார்கள்பங்கினி லமர்ந்தருளும்ராம ஜெயமே, ஐயனேயெனையாளுமெய்யனேஸ்ரீமதே ராமா நுஜாயநமவே. (௩)

உற்றமிதிலைப் பதியில் வில்லிரண்டாகவே யொடித் ததும்ராமஜெயமே, உம்பர்தொழு மங்கையை யுணர்ந்து திருமந்திர மூவந்தருளும் ராமஜெயமே, கொற்றவர்கள் கண்டுதொழ பாசுராமன்கையில் கொண்டதும் ராமஜெ யமே, கோதண்ட வாள்கதா சங்குசக்ராயுத கோபால ராமஜெயமே, மெத்தவரு மூலபல மத்தனையு மேகொன் று வெற்றிபெறும் ராமஜெயமே, மெலிவுற்றசுக்கிரீவனு க்காக வாலியை வீழ்வித்த ராமஜெயமே, அத்தனேயெ னையாளுங் கர்த்தனே மெய்ஞ்ஞான மருள்புரியும் ராம ஜெயமே, ஐயனே யெனையாளு மெய்யனே ஸ்ரீமதே ரா மாநுஜாய நமவே. (௪)

சோதியே யென்றுமறை வேதியர்களோதவுஞ்சொல்லரிய ராமஜெயமே, சோம்புடனேவந்த விபீஷணன்குறைதீர்க்கத் தோன்றிடும் ராமஜெயமே, ஊதியே குழலினு லேகளத்தளவிலே யுகந்ததும் ராமஜெயமே, உயர்கருடன் மீதினில் இலட்சுமி சமேதனுய் வுலாவிவரும் ராமஜெயமே, நித்தனு யத்தனுய்ச் சுத்தனுய் வைகுந்தநிலைகொண்ட ராமஜெயமே, ஆதியே நின்னும மோதுவோர்க் கென்நாளும் அருள்புரியும் ராமஜெயமே, ஐயனே யெனையாளு மெய்யனே ஸ்ரீமதே ராமா நுஜாய நமவே. (ரு)

மண்டலம்புகழவே வசுதேவன்மைந்தனுய் வந்தருளும் ராமஜெயமே, மாயாவதாரமாய் கோபஸ்திரிமாரெலா மயல்பூண்ட ராமஜெயமே, விண்டலர் புகழ்திருப்பதிகனூற் றெட்டினும் விளங்கினதும் ராமஜெயமே, வேதவேதாந்தபரி பூரணதயாபர மெய்ஞ்ஞான ராமஜெயமே, கொண்டல்மணி வண்ணனுய் பாற்கடலிலேபள்ளிகொண்டதும் ராமஜெயமே, கோடானு கோடிபேர் பல்லாண்டுகூறியே கொண்டாடும் ராமஜெயமே, அண்டர்தினமேதொழும் புண்டரீகபாதனே யரும்பொருளும் ராமஜெயமே, ஐயனேயெனையாளு மெய்யனே ஸ்ரீமதே ராமா நுஜாய நமவே. (சு)

முப்பத்து முக்கோடி தேவருமுனிவரும் மொழிகி
ன்ற ராமஜெயமே, மூவரும்ராமஜெய மேயென்றுரைக்க
நன் முத்திதரும் ராமஜெயமே, செப்பமந் திரியெலாம்
ராமஜெயமேமார்பில் திருவளரும் ராமஜெயமே, சீர்கொ
ண்ட ராமஜெய மார்கண்டுபணிகுவார் சித்திரவொளி
ராமஜெயமே, ஒப்பரிய ராமஜெய மெய்ப்பொருளும் ரா
மஜெயம் ஓதரிய ராமஜெயமே, உட்சதரும் ராமஜெயம்
பட்சந்தரும் ராமஜெயம் ஓங்கார ராமஜெயமே, ஒளிவு
பெற்றோங்கி நளினபொற் பாதமரு ளப்பனே ராமஜெய
மே, ஐயனே யெனையாளு மெய்யனே ஸ்ரீமதே ராமாநு
ஜாயநமவே. (எ)

சத்தியும்ராமஜெய முத்தியும்ராமஜெயஞ் சர்வமும்
ராமஜெயமே, சாத்திரமும் ராமஜெயம் தோத்திரமும்
ராமஜெயஞ் சதுர்வேதம் ராமஜெயமே, பத்தியும்ராமஜெ
யஞ் சித்தியும் ராமஜெயம் பதவியும் ராமஜெயமே, பத்
தர்தொழும் ராமஜெயம் பலவிதமும் ராமஜெயம் பட்ச
மருள் ராமஜெயமே, வெற்றியும் ராமஜெயம் புத்தியும்
ராமஜெயம் மெய்ப்பொருளும் ராமஜெயமே, வேள்வி
யும் ராமஜெயம் ஆவியும் ராமஜெயம் மேல்வீடு ராமஜெ
யமே, அத்திமேல் பவனிவரு நித்தியகல்யாணனே ஆன

ந்தராமஜெயமே, ஐயனே யென்னையாளு மெய்யனே ஸ்ரீம தே ராமாநுஜாய நமவே. (அ)

பாடவறி யேன்ராம ஜெயமென்று நின்புகழ் பகர றியேன் ராமஜெயமே, பத்தியாய் ராமஜெய மென்றுன துபாதமலர் பணியறியேன் ராமஜெயமே, தேடவறியே னின்னை ராமஜெய மேயென்று செப்பறியேன் ராமஜெ யமே, தேவர்க்கும் யாவர்க்கும் அரிதானதேவனே தே னமிர்த ராமஜெயமே, நாடவறி யேனின்னை ராமஜெய மேயென்று நவிலவறியேன் ராமஜெயமே, நாயேனுனக் கடிமை யானேனெனக்குகதி நல்குவாய் ராமஜெயமே, மூடவரமுண்டபல கோடிபேருண்டபொரு ளானந்த ராமஜெயமே, ஐயனே யென்னையாளு மெய்யனே ஸ்ரீமதே ராமாநுஜாயநமவே. (கூ)

விரிவாயகண்டபரி பூரணமு மாயெங்கும் விளையா டுகின்றசோதி, விண்ணவர்க் கமுதளித் தண்ணலேயுன் புகழ் விளம்புதற் கரிதுகண்டாய், தெரியாமல் நாயேன் இடர்க்கடலி லேமூழ்கி சிந்தைமிக நொந்துருகினேன், தேவாதி தேவனே வைகுந்த வாசனே செந்தாமரைக் கண்ணனே, பரிவானவுனதுதிரு வடியாமெனக்குதர பர மபுருஷா வுனக்கு, பாரமோ துயர்களைய நேரமோ யிவ்

வேளை பட்சம்வைத் தடியன்மீதில், அரியேநமோவேத நாராயணு கிருபை அருள்புரியும் ராமசெயமே, ஐயனே யெனையாளு மெய்யனே ஸ்ரீமதே ராமாநுசாயநமவே. (கo)

சீர்கொண்ட ராமசெய மென்றுதிரு மந்திரஞ் செபிக்கவறி யாமனுயேன், செப்பினேன் ராமசெய மப்பனே நூற்றெட்டு திருநாமம் ராமஜெயமே, நீர்கொண்ட பார்மிசை மலர்கொண்டு சாத்தியே நித்தமும் ராமசெயமே, நெஞ்சினில் ராமசெய மந்திரமு வந்தருளும் நீங்காமல் ராமசெயமே, கார்கொண்ட திருமேனி ராமசெயமேயென்னைக் காத்தருளும் ராமசெயமே, காதலால் ரா்மசெய மேயென்று நம்பினேன் கர்த்தனே ராமஜெயமே, ஆர்கண்டுமறியாத மூலமந்திரமான வாதியேராமசெயமே, ஐயனே யெனையாளு மெய்யனே ஸ்ரீமதே ராமாநுஜாயநமவே. (கக)

ஸ்ரீ ராமர் பதிகம்,

முற்றிற்று.

---